# தமிழகத்துக்கு 15 லட்சம்; புதுச்சேரிக்கு 5 லட்சம்
# ராஜீவ் வருகையால் உடன் வெள்ள நிவாரணநிதி

(சென்னை)

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தமிழகத்திலும், புதுச்சேரியிலும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை நேற்று ஹெலிகப்டரில் சென்று பார்வையிட்டார். பிரதமர் இதற்காக நேற்று மாலை விசேட விமானமொன்றில் சென்னை வந்தடைந்த போது முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன், ஆளுநர் திரு. எஸ். எல். குரானா, மற்றும் மாநில அமைச்சர்கள், இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. க. மூப்பனர், திரு. பழனியாண்டி ஆகியோர் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர்கள். அங்கிருந்து இந்தியப் பிரதமர் விசேட ஹெலிகப்டரில் புதுச்சேரியிலும், தமிழகத்திலும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை சென்று பார்வையிட்டார். அவருடன் தமிழக நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. அந்தோனி ஆகியோரும் சென்றனர். புதுச்சேரி மாநிலத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு பத்துக் கோடி ரூபா ஒதுக்கப்பட வேண்டுமென பிரதமரிடம் கோரிக்கை விடப்பட்டது. இதனை பரிவுடன் பரிசிலனை செய்வதாகத் தெரிவித்த பிரதமர், ''பிரதமர் நிவாரண —6ஆம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 16-11-85 சனிக்கிழமை (கார்த்திகை 1 ரபியு அவ் 3) முழக்கம் 281

★ இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் புதியதொரு திருப்பம்

# வடகிழக்கு இணைந்த சபையை
# பாரதம் முன்வைக்க யோசனை

## இலங்கை தனது போக்கினை மாற்றுவிடின் இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்றலாம்

(புதுடில்லி)

இலங்கை அரசு சமர்ப்பித்த மாகாணசபை யோசனையை தமிழீழக் குழுக்கள் ஏற்க மறுத்துள்ளதுடன், தமிழீழம் என்ற கோரிக்கையைக் கைவிட்டு மாற்று யோசனையொன்றையும் சமர்ப்பிக்க அவர்கள் மறுத்துள்ளதால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மத்தியஸ்தம் வகிக்கும் நாடென்ற வகையில் பாரத அரசு இடைப்பட்ட மாற்றுத் திட்டமொன்றைத் தயாரித்து இரண்டு பகுதியினரதும் பரிசிலனைக்குச் சமர்பிக்க ஆலோசித்து வருகின்றது.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமெனக் கூறப்படும் வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதிக்குத் தனியான ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கும் யோசனையையே பாரதம் தனது இறுதி முயற்சியாகச் சமர்ப்பிக்கலாமென வெளியுறவு அமைச்சின் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கொழும்பு வந்துள்ள இலங்கையின் பாரதத் தூதுவர் திரு. பெர்னுட் திலகரத்தின புதுடில்லி திரும்பியதும் இது தொடர்பான பேச்சு வார்த்தைகளை வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி ஆரம்பிக்கலாமெனத் தெரியவருகின்றது.

இந்த யோசனைக்கு இலங்கை அரசு தெரிவிக்கும் கருத்துக்களை அறிந்த பின்னரே, சென்னையில் தங்கியுள்ள தமிழீழக் குழுக்கள் புதுடில்லிக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

யுத்த நிறுத்த ஒப்பந்தங்களை மீறி இலங்கை ராணுவம் நடந்து கொள்வது பற்றி பாரத அரசு கவலை கொண்டிருப்பதாகவும், இம்மாதம் 18ம்திகதி —6ஆம் பக்கம் பார்க்க

## இளம் பெண்ணும் சுட்டுக் கொலை

எட்டு தீவிரவாத இளைஞர்களும், ஒரு இளம் பெண்ணும் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், முப்பத்திரண்டு பேரைப் படையினர் கைது செய்ததாகவும் இந் —6 ஆம் பக்கம் பார்க்க

### பிரதமர் ராஜீவ் அறிவிப்பு

## தமிழீழ தீவிரவாதிகட்கு நாம் ஆயுதம் வழங்கவில்லை

(சென்னை)

இலங்கையின் தமிழீழ தீவிரவாத இயக்கங்களுக்கு இந்திய அரசு ஆயுதங்கள் வழங்குவதாக தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டுக்களை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று அடியோடு மறுத்தார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் அவர் பேசுகையில் இந்தக் குற்றச்சாட்டில் எந்த உண்மையுமில்லை என்றார்.

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தது இதற்கு மாற்றாக தமிழீழக் குழுக்கள் எதனையும் சமர்ப்பிக்கவில்லை எனவும் பிரதமர் குறிப்பிட்டுச் சொன்னார்.

இரு பகுதியினரையும் ஒன்றாகச் சந்திக்க வைத்து பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் பாரதம் தொடர்ந்தும் முயன்று வருவதாகவும் பிரதமர் ராஜீவ் காந்தி மேலும் தெரிவித்தார்.

## சுடாநாட்டில் ஹர்த்தால் பூரணமான வெற்றி

மலையக மக்களை நாடற்றவர்களாக்கி அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டம், இந்திய-பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டம் என்பன நிறைவேற்றப்பட்ட தினத்தையொட்டி ''ஈரோஸ்'' இயக்கம் விடுத்த கோரிக்கையில் நேற்று யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனையவை ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தன. யாழ்நகரின் சிலபகுதிகளில் நேற்றுமுன்தினமிரவும், நேற்றுக்காலையும் குண்டு வெடிப்புகளும் இடம்பெற்றன. வர்த்தக ஸ்தாபனங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுமக்கள் நடமாடும் அரச அலுவலகங்கள் -6ஆம் பக்கம் பார்க்க

## பூஸா இளைஞர் அறுபதுபேர் இருவாரத்துள் விடுதலையாவர்

பூஸா ராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் சுமார் அறுபதுபேர் மீதான விசாரணைகள் பூர்த்தியடையும் கட்டத்திலுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இரகஸிய பொலிஸ் பகுதியைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் தற்போது விசாரணைகளைத் துரிதப்படுத்திவருவதாகவும், தினசரி மும்மூன்று பேர் விசாரணைக்குட்படுத்தப் படுவதாகவும் தெரியவந்துள்ளது.

அடுத்த இரண்டு வாரத்துக்குள் ஏறத்தாழ அறுபதுபேர் விடுதலை செய்யப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. —6ஆம் பக்கம் பார்க்க

### மட்டுநகரில்

## பஸ்ஸுக்கு குண்டுவீச்சு; ரயில் பாதையில் குண்டுவெடித்தது

(மட்டுநகர்)

கிழக்கு மாகாணத்திலும் பரவலாக நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்புப் பகுதியில் இரண்டு பிரதான குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் —6ஆம் பக்கம் பார்க்க

## ஒட்டுசுட்டான் கண்ணி வெடித்தாக்குதலில் நான்கு ராணுவத்தினருக்குக் காயம்

ஒட்டுசுட்டானில் நிகழ்ந்த தரைக் கண்ணிவெடிப்புச் சம்பவம் ஒன்றில் நான்கு ராணுவத்தினர் காயமடைந்ததாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஒட்டுசுட்டான் முல்லைத்தீவுப் பாதையில் இராணுவ வாகனம் சென்று கொண்டிருக்கையில் இக்கண்ணிவெடி வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த ராணுவத்தினர் ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில் கடந்த சில தினங் ...6ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா மன்னார் பகுதியில் முழு வெற்றியளிக்கவில்லை

(வவுனியா)

வவுனியா, மன்னார் பகுதிகளில் நேற்றைய ஹர்த்தால் முழுமையாக அமுல் படுத்தப்படவில்லையென அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகரில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரத்தை நடத்துவதில் ஆயுதப்படையினர் மும்முரமாக ...6ஆம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

வே சிவலிங்கம், செலகம தோட்டம், மாவலை என்ற விலாசமுடைய அடையாள அட்டை கிளிநொச்சி நகரில் தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி லக்கி ஸ்டோர்ஸ் கடையில் ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

வடிவேல் நடராசாவின் அடையாள அட்டையும், வாகன லைசென்ஸ் றிசீற்றும் கிளிநொச்சியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி பாலவிநயகர் ஸ்டோரில் ஒப்படைத்து சன்மானம் பெறவும்.

## ஞாபகார்த்த பரிசில்கள் வழங்கப்பெறும்

வருடாந்த பரிசுத்தினத்தின் போது வழங்கப்படும் பரிசில்களுடன் ஞாபகார்த்த பரிசில்கள் வழங்குவதென சென்ற ஞாயிறு உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் தீர்மானித்தது. பாடசாலை அதிபர் திரு. வி. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் சபையின் முயற்சியால் ஞாபகார்த்த பரிசில்களுக்கு திரு. திருமதி மனோகரபூபதி தம்பதிகள் ரூபா 5000/-மும், திரு. ஏ செல்லையா ரூபா 5000/-மும் அன்பளிப்புச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவ் விடயத்தில் சபை தொடர்ந்தும் அன்பளிப்புக்களை திரட்டும் என்றும், அத்தொகை வங்கியில் வைப்புக் கணக்கில் இடப்பட்டுப் பெறப்படும் வட்டியிலிருந்து பரிசில்கள் வழங்கப்படும் என்றும் மேலும் தீர்மானிக்கப்பட்டது

## இந்துவுக்கு வெற்றி

(சரசாலை)

சாவகச்சேரி இந்துகல்லூரி பதினைந்து வயதுக்குட்பட்ட மாணவர்கள் உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்று கால் இறுதிப்போட்டிக்கு பங்குபற்ற தகுதிபெற்றுள்ளனர். இவர்கள் மானிப்பாய் இந்துக்கல்லூரியுடன் போட்டியிட்டு ஒரு கோலால் வெற்றி பெற்றனர். ஸ்கந்தவரோதயக் கல்லூரியை மூன்று கோலால் வென்றனர்.

## ஜெபவார நிகழ்ச்சிகள்

(நல்லூர்)

உலக வை. எம். சீ. ஏ. ஸ்தாபனமும், உலக வை. டபிள்யூ. சீ ஏ. ஸ்தாபனமும் இணைந்து சர்வதேச ரீதியில் நடாத்தும் ஜெபவாரத்தையொட்டிய நிகழ்ச்சிகளை யாழ்ப்பாண வை. எம். சீ. ஏ ஸ்தாபனமும், யாழ். வை. டபிள்யூ சீ. ஏ. ஸ்தாபனமும் இணைந்து நடாத்திவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சுண்டுக்குளி பரி. யோவான் ஆலயத்தில் ஆலயச் சேகரக்குரு அருட்திரு. யே சர்வானந்தன் அடிகளார் ஒப்புக்கொடுத்த திருவிருந்தாராதனையில் இரு ஸ்தாபனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இன்று சனிக்கிழமை மாலை யாழ் சென்ற். பீற்றர்ஸ் ஆலயத்தில் அருட்திரு யே. எச். ஆர். ஜெயச்சந்திரன் அடிகளார் முடிவு ஆராதனையை ஒப்புக் கொடுத்து அருளுரை நிகழ்த்துவார்.

## ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

[மிருசுவில்]

புதிய கல்வித் திட்டத்தின் கீழ் 1986ம் ஆண்டில் இரண்டாம் ஆண்டிற்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகளை யாழ். கல்வித் திணைக்களம் தற்போது நடாத்தி வருகின்றது யாழ். கல்வி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் அந்தந்த வட்டாரப் பாடசாலைக்குரிய ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சி வழங்கப்படும்.

இப் பயிற்சித் தொடர் நல்லூர் கல்வி வட்டார ஆசிரியர்களுக்கான பயிற்சியுடன் கடந்த 14ம் திகதி ஆரம்பமாகியது. அடுத்து சாவகச்சேரி வட்டார ஆசிரியர்களுக்கான பயிற்சியும் தொடர்ந்து ஏனைய வட்டார ஆசிரியர்களுக்கான பயிற்சியும் நடைபெறும். இப் பயிற்சித் தொடர் இம் மாத இறுதி வரை நடைபெறும். கொழும்பில் விசேட பயிற்சி பெற்ற ஆறு ஆசிரியர்கள் இப் பயிற்சி வகுப்புகளை தற்பொழுது நடாத்தி வருகின்றனர்.

## சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம்

[சரசாலை]

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் நீதியரசர் எஸ். சர்வானந்தா மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் உயர் நீதிமன்ற சட்டத் தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். சரசாலை சரஸ்வதி வித்தியசாலையில் ஆரம்பக் கல்வியை பயின்றபின்பு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர்கல்வியை மேற்கொண்டார். சிறிது காலம் மேற்படி கல்லூரியில் ஆசிரியராகவும் கடமை புரிந்தார்.

பின் நீதி மன்ற பிரதம ஊழியராகி மல்லாகம், சாவகச்சேரி நீதிமன்றத்திலும் கடமையாற்றியதுடன் கொழும்பு ஆட்பதிவு திணைக்களத்திற்கு பதவி உயர்வு பெற்றுச் சென்றார். தற்போதும் கொழும்பில் நீதி பரிபாலன அலுவலகத்தில் பிரதம ஊழியராக கடமை புரிந்து வருமிவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பட்டதாரி ஆவார். இவர் ஓர் தொழிற் சங்கவாதியும் சமய சமூக சேவையாளருமாவார். இவர் தற்போது கொக்குவிலை வசிப்பிடமாக கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது தமிழ் இனமக்களின் நலனில் அக்கறை கொண்ட தமிழ் காங்கிரஸ் கட்சி பிரமுகராவார்.

## இயக்குநர்கள் தெரிவாகினர்

(பூநகரி)

பூநகரி பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குநர் சபைத் தேர்வு அண்மையில் நடைபெற்றது. பொதுச் சபை உறுப்பினர் 12 பேரை இயக்குநராக தெரிவு செய்தனர். எழுவர் மட்டும் இயக்குநராக தெரிவு செய்யப்பட வேண்டியிருந்ததால் இறுதி நேரத்தில் ஐவர் நல்மனதுடன் வாபஸ் பெற்றுக் கொண்டனர். முன்னுள் தலைவர் திரு தி இராசநாயகம் தலைமையில் திருவாளர்கள் ச. தில்லையம்பலம் சி. தேவராசா க. மகேந்திரராசா க மகாதேவா பொ. தங்கராசா ஆகியோர் தெரிவாகினர் இன்னும் இருவரை இயக்குனர் சபையில் இணைக்க நடவடிக்கை எடுப்பதாக சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. சண்முகலிங்கம் குறிப்பிட்டார்.

## வீதிகள் சீர்கேடு

(வேலணை)

வேலணை பெருந்தெருக்கள் திணைக்களத்தால் வேலணைப் பகுதி வீதிகள் திருத்தம் செய்யப்பட்ட போதிலும் வீதி திருத்திய இரண்டு மூன்று தினங்களிலேயே அவ்வீதிகள் உடைந்து சேதமாகி விடுவதுடன் போக்கு வரத்திற்கு உபயோகிக்க முடியாத நிலையிலும் இருந்து வருகின்றன.

இதற்குக் காரணம் இவ்வீதிகள் யாவும் தகுந்த முறையில் செப்பனிடாததேயாகும். பாதசாரிகளோ அன்றித் துவிச்சக்கரவண்டிகளோ செல்ல முடியாதவாறு நிலைமை மோசமாக மாறியுள்ளது.

மழை பெய்யும் காரணத்தினுலும் வீதிகளுக்குப் போடப்பட்ட கல்லுகள் தார் யாவும் சீர்கெட்டு குண்டும், குழியுமாக காட்சியளிக்கின்றது.

## லட்சார்ச்சனை நடைபெறும்

(சுழிபுரம்)

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த ஏகதின லட்சார்ச்சனை இம் மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இவ் அர்ச்சனை மாலை பூர்த்தியானதும் மாலா மந்திர ஹோமம், திரிசதிஹோமம், தாராஹோமம் ஆகியன நடைபெற்று அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வருவாள்.

நியாயசிரோன்மணி க சுப்பிரமணியசாஸ்திரிகள் பிரதிட்டா சிரோன்மணி சாமி. விஸ்வநாதக்குருக்கள் சிவஸ்ரீ ச. வரதராஜக்குருக்கள் ஆகியோர் பிரதம சிவாசாரியார்களாக இருந்து மேற்படி இலட்ச்சார்ச்சனையை நடாத்தி வைப்பார்கள்.

## 16 சிறுர்கள் தீட்சை பெற்றனர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான சைவசமய தீட்சையை, சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் வழங்கினுர். வித்தியாலய அதிபர் திரு கே. எஸ். பொன்னையா தலைமையில் நடைபெற்ற இச் சைவசமய தீட்சை வைபவத்தில் பதினுறு சிறுர்கள் கலந்து கொண்டு தீட்சை பெற்றனர் சைவத்திருமணி சைவசித்தாந்த செம்மல் இசையரசு சி. விஞசித்தம்பி சைவப்பெரியார் இளைப்பாறிய கூட்டுறவு ஆணையாளர் திரு. வே. நடராஜா உட்பட பல பெரியார்கள் கலந்து கொண்டு அங்கு வருகை தந்திருந்த பெற்ருருக்கு சமய தீட்சையின் முக்கியம் பற்றி விளக்கினர்.

## அபிவிருத்திச் சபை ஆரம்பம்

(வேலணை)

வேலணை அரசினர் கிராமிய மருத்துவமனை அபிவிருத்திச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜி. தங்கவேலு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. இ. நாகராசா, உப தலைவர் திரு ஆ. துரைராசா, செயலாளர் திரு. இ சற்குருநாதன், உப செயலாளர் கா. விஜயரெத்தினம், தனுதிகாரி க. மார்க்கண்டு, பதினைந்து பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

## ★ பிறந்தநாள் வாழ்த்து ★

✱ அச்சுவேலி தெற்கு, சிவராசா பவானி தம்பதியின் மகள் கஜிந்தா இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✱ நல்லூர், சிவராசா ராஜமணி தம்பதியின் மகன் சஞ்சீர் இன்று தனது எட்டாவதுபிறந்த நாளைக்கொண்டாடுகிருர்.

✱ புங்குடுதீவு, முத்துராஜா சித்திராதேவி தம்பதியின் மகள் சிந்துஜா இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✱ பாஷையூர், மரியநாயகம் எலிசபெத் தம்பதியின் மகன் ஞானறூபன் இன்று தனது பதின்மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✱ நாரந்தனை தெற்கு, அன்ரன் லிப்பின் தம்பதியின் மகன் ஜெயந்தன் இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக்கொண்டாடுகின்ருர்.

✱ கொழும்புத்துறை, சாந்தலிங்கம் சுடர்விழி தம்பதியின் மகள் புஷ்பராணி இன்று தனது பதின்மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர்.

✱ உரும்பராய் கிழக்கு யோசெப் ராஜேஸ்வரி தம்பதியின் மகள் லியோனு தனது ஆருவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிருர்.

## பரிசளிப்பு விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற சமய அறிவுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கானபரிசளிப்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

## அகதிகள் நிதிக்காக புங்குடுதீவில் இன்று கலைவிழா

அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக புங்குடுதீவு மாணவர் மன்றத்தால் நடத்தப்படும் மாபெரும் கலைவிழா இன்று மாலை ஆறு மணிக்கு புங்குடுதீவு மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் புங்குடுதீவு மாணவர் மன்றத் தலைவர் செல்வன் கா. தவராசசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

கொத்தணி அதிபர் திரு. ஆர். எஸ் செல்லத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இக்கலைவிழாவில் ஆய்வரங்கு கவிதா நிகழ்வு, பரதம், கும்மி நடனம், குறத்தி நடனம், நாட்டிய நாடகம், வில்லிசை, இசைவார்ப்புக்கள் போன்ற கலைநிகழ்ச்சிகள் உட்பட பல நாடகங்களும் இங்கு நடைபெறும்.

## வெளிக்கள உத்தியோகத்தர் இல்லை

(வேலணை)

தென்னை அபிவிருத்திச்சபையினுல் நியமிக்கப்பட்டுள்ள வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் சிங்கள பிரதேசங்களில் ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு சராசரி இரண்டு உத்தியோகஸ்தர்கள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனுல் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தளவில் பதினுறு உதவி அரசாங்க அதிபர் பிரிவு இருந்தும்கூட ஒரேயொரு வெளிக்கள உத்தியோகஸ்தர் மட்டும்தான் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஆஸ்பத்திரிக்கு கட்டடங்கள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை ஊழியர் கோரிக்கை அடுத்த ஆண்டு நிறைவேறுகின்றது. நீண்டகாலமாக ஆஸ்பத்திரியில் களஞ்சிய மண்டபமும், ஊழியர் ஓய்வுநேர இளைப்பாற்றுச் சாலையும் இல்லாது பெரும் சிரமப்பட்டனர்.

யாழ்ப்பாண சுகாதார அத்தியட்சகர் மேற்படி தேவைகளை நிறைவேற்றும் வகையில் ஒழுங்குகளும் நிதி ஒதுக்கீடும் செய்துள்ளார் என அறிய வந்துள்ளது. அடுத்தாண்டு இவ்விரு கட்டடங்களும் பூர்த்தியாகிவிடும் என அறியவருகின்றது.

## உணவு பொருள் விநியோகம்

[புங்குடுதீவு]

போருட், சர்வோதயம், குழந்தைகள் நிறுவனம் ஆகிய மூன்று ஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து தீவுப்பகுதியில் உள்ள போஷாக்குக் குறைந்த குழந்தைகள் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோருக்கு போஷாக்கு உணவுப் பொருட்களை விநியோத்து வருகின்றது.

புங்கு தீவு, நயினுதீவு, நெடுந்தீவு ஆதியாமிடங்களில் இதற்கான விநியோக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அரிசி, சீனி, பால்மா வகைகள் ஆதியன இந் நிலையங்களின் மூலம் தற்போது வழங்கப்படுகின்றன.

சகலவித போட்டோஸ்ரற் பிரதிகளும்
தட்டச்சு வேலைகளும் தரமாக செய்துகொடுக்கப்படும்.

"HILTON RADIOS"

CANNON COPYING CENTRE

544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வல்வெட்டித்துறை, யாழ் வீதி
ஆனந்தன் இல்லத்தில்

ICMA ... Foundation Stage
IAA .... Part I
IDPM .... Part I
IAB

வகுப்புகள் நடைபெறும்.
ஆரம்பம் : 19—11—1985

### பண்டாரிக்குளம் பகுதி

## காட்டுக்குள் மாறு வேடத்தில் படைவீரர்? மக்கள் பதற்றம்

(ஒட்டுசுட்டான்)

நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதபடையினர் சில தினங்களுக்கு முன் நெடுங்கேணிப் பகுதியிலிருந்து ஒட்டுசுட்டான் இராணுவ முகாமுக்கு நடந்து வரும் பொழுது அப்பாதையால் ஒட்டுசுட்டானிலிருந்து நெடுங்கேணிக்கு வாகனத்தில் சென்ற சிலர் பண்டாரிக்குளம் என்ற இடத்தில் ஆயுதப் படையினர் வரும் செய்தியைக் கேள்விப்பட்டதும் வாகனத்தை நிறுத்திவிட்டு காடுகளுக்குள் மறைந்து விட்டனர்.

வாகனம் வீதியில் நிற்பதைக்கண்ட ஆயுதப்படையினர் அக்காட்டுப்பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர் என்றும் காட்டுப் பகுதியில் ஒருவரையும் காணுததால் அப்பகுதியில் துப்பாக்கியால் சுட்டுவிட்டு அருகில் இருந்த சில வீடுகளையும் தீக்கிரையாக்கினதாகவும் பின்னர் காட்டுக்குள் மறைந்திருந்த வாகனத்தில் சென்றவர்களுள் இருவர் தமது வாகனத்தையும் பாதுகாப்பாக எடுத்துக் கொண்டு சென்றதாகவும் அறியப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள காடுகளில் ஆயுதப்படையினர் இரவு பகல் கூடாரம் அடித்து மாறு வேடத்தில் இருப்பதாகவும் அறியப்படுகிறது. இதனுல் இப் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் குடியேற்றத்திட்டங்களில் சிறு குடிசைகளில் வசிக்கும் மக்கள் அவ்வீதிகளால் செல்வதற்கும் அஞ்சுகின்றனர்.

இதேசமயம் நெடுங்கேணிப் பகுதியில் ஹெலிகப்டர் ஒன்று பறந்து திரிந்து சனங்ளின் நடமாட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தது. இச் செய்தி முள்ளியவளை தண்ணியூற்று ஒட்டுசுட்டானுக்குப் பரவியதும் பதற்ற நிலை இருந்தது.

## வெள்ள அகதிகள்

(சரசாலை)

சாவகச்சேரி பெரியமாவடி என்ற இடத்தில் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டு சில குடும்பங்கள் வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ளன. உப்புக் கேணிக்குளம் நீர் அதிகரித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பொதுப்பரீட்சை

(கொடிகாமம்)

தொண்டமானுறு வெளிக்கள நிலையப்பரீட்சைச் சபையால் நடாத்தப்படும் உயர்தர வகுப்புகளுக்கான பொதுப் பரீட்சையில் ஆண்டு பன்னிரெண்டுக்கான பரீட்சை இம் மாதம் பதினெட்டாம் திகதி ஆரம்பமாகி இருபத்து ஆரும் திகதி முடிவுறும்.

கடந்த ஏழாம்திகதி ஆரம்பமான ஆண்டு பதின்மூன்றுக்கான பரீட்சைகள் பத்தொன்பதாம் திகதி முடிவுறும்.

## 'தன்னலமற்ற பணிமூலமே நிறுவனம் உயர்வு பெறும்'

(சுழிபுரம்)

பல்வேறு இடர்களையும், நெருக்கடியான சூழ்நிலைகளையும் தாண்டி எம் நிறுவனம் சிறந்த முறையில் எம்மாணவர்களுக்கு தொழில் நுட்ப நெறிகளை பயிற்றுவித்து வருகிறது. இது தொடர்ந்தும் சிறந்த செயற்பாட்டைத் தர பொது மக்களின் ஒத்துழைப்பும், மாணவர்களின் கூட்டு முயற்சியும் அவசியம். எமது சிறந்த நிர்வாகத்திற்கு இங்கு பணிபுரியும் சகல ஆசிரியர்களதும் விரிவுரையாளர்களதும் தன்னலமற்ற பணியும் பக்கபலமாக இருந்து வருகிறது.''

இவ்வாறு கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் ஒன்று கூடல் வைபவத்தில் உரையாற்றிய நிறுவன அதிபர் திரு. எஸ். இராஜேந்திரா கூறினுர்.

நிறுவனத்தின் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்ற மேற்படி வைபவத்திற்கு ஒன்றியத் தலைவர் செல்வன். சூரிய மூர்த்தி தலைமை தாங்கினுர்.

அதிபர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ''மாணவர்களுக்கிடையே ஒருமைப்பாடும், ஒற்றுமையும் நிலைக்க வேண்டும். தமக்கிடையே கருத்து வேறுபாடுகளை களைந்து ஒன்றியங்களின் வளர்ச்சியை நிலை நாட்ட வேண்டும். இதன் மூலமே நிறுவனத்தின் பெயரை காப்பாற்றலாம். நிறுவனத்தில் ஏற்படும் ஒரு லசிகுறைபாடுகள் நாட்டின் சூழ் நிலைகளால் தவிர்க்க முடியாதவையாகின்றன. இவற்றிற்கு ஏற்ப அனைவரும் அனுசரித்து நடக்க வேண்டும்'' என்ருர்.

## மன்னுர் துயர் துடைப்பு மறுவாழ்வுக்கு 21ம் திகதி நிதி சேகரிப்பு

மன்னுர் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் இம்மாதம் 21ம் திகதி நடத்தவிருக்கும் நிதிசேகரிப்பு தொடர்பாக சங்கத்தலைவர் வண. அ. சேவியர் குரூஸ்அடிகள் விடுத்துள்ள வேண்டுகோள் விபரம் வருமாறு:-

கடந்த வருடம் மன்னுர் மாவட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவிசெய்யும் முகமாகவும், கடந்த ஆவணி 15 இலிருந்து வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக மன்னுரில் தஞ்சம் புகுந்த 3, 500 ற்கு மேற்பட்ட அகதிகளிற்கு உதவி செய்யும் முகமாகவும். மன்னுர் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தினுல் கார்த்திகைமாதம் 21ம் திகதி வியாழக்கிழமை 85ம் ஆண்டுக்குரிய நிதி வசூலிக்கும் ''ம து.ம.ச.தினமாக அனுஷ்டிக்க முடிவு செய்துள்ளனர்.

இத்தினத்தில் சங்கத்தின் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொண்டர்கள் மன்னுர் மாவட்டத்லுள்ள பாடசாலைகள், அரசாங்க தனியார் காரியலயங்கள், பொது மக்கள் கூடும் இடங்களில் ம. து. ம.ச வினுல் விநியோகிக்கப்படும் 'தவிப்போர் துயர் துடைக்க தருவீர் ஆதரவு' வாசகம் பொறிக்கப்பட்ட பொலித்தின் பை உறைகளை ரூபா ஒன்றுக்கு விற்று நிதி வசூலிப்பார்கள்.

இத்தினத்தில் முதலாவது விற்பனையைமன்னுர் மாவட்ட அமைச்சரும், அரசாங்க அதிபரும் மன்னுர் புத்த விகாரை பிரதம குருவும். மன்னுர் ஆயர் அவர்களும் வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைப்பார்கள்.

இந்த நல்ல கைங்காரியத்திற்குப் பாடசாலை மாணவ மாணவியரும், மன்னுர்பொது மக்களும் தங்களது பூரண ஒத்துழைப்பை மன்னுர் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்திற்குவழங்கி தவிப்போர்துயர் துடைக்க ஆதரவு தருமாறு அன்பாக வேண்டுகின்றனர்.

## இருள் அகன்றது

(கொடிகாமம்)

மின்மாற்றி சேதமடைந்ததை அடுத்து கடந்த ஒரு மாத காலமாக இருளில் மூழ்கியிருந்த மீசாலைக்கிராமம் தற்பொழுது புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டதை அடுத்து மீண்டும் ஒளி பெற்றுள்ளது.

## நாட்டுநிலை என சாட்டுக் கூறி ஆசிரியர்கள் அசிரத்தையா?

### கல்வியதிகாரி கண்டனம்

(ஒட்டுசுட்டான்)

''நாட்டு நிலைமை என்று சாட்டுக் கூருது அறிவுள்ள சமுதாயத்தை ஆக்கித்தர வேண்டிய பொறுப்பிலிருந்து ஆசிரியர்கள் ஒடி விட முடியாது இன்னல்களுக்கிடையே வாழ்ந்து வரும் ஒரு இனத்தை மேலும் படு குழிக்குள் தள்ளாது, அறிவுள்ள சமுதாயமாக மாற்ற வேண்டியது அவர்களது கடமையாகும்'' என்று மாங்குளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தம் அவர்கள் மு/மல்லாவி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இரண்டாம் ஆண்டுக்கான ஆசிரியர் பயிற்சி வகுப்பைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாங்குளம் வட்டாரத்தின் சகல பாடசாலைகளில் இருந்தும் ஆசிரியர்கள் பெருமளவிற் கலந்து கொண்ட ஐந்து நாள் இப் பயிற்சி வகுப்பினை முல்லைத்தீவுக் கல்விக் கந்தோர் கல்வி அதிகாரி திரு.சி. தியாகராசா ஒழுங்கு செய்திருந்தார்.

ஆசிரியர்கள் குழுக்களாக மாறிப் பல செயல் திட்டங்களில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாக அமைந்தது. முன்னேடி ஆசிரியர்களான திருமதி க. இராசசிங்கம், செல்வி. ந. பாலராணி ஆசிரியர்கள் கவர்ச்சிகரமான உபகரணங்களோடு பயிற்சி நெறியினை வழிப்படுத்தியமை பலரதும் பாராட்டையும்பெற்றது. முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் அவர்கள் இறுதி நாள் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு வாழ்த்தினுர்,

## கல்வியில் ஆர்வம் கொள்ள பரிசளிப்பு விழா உதவும்

(பண்டத்தரிப்பு)

''பரிசளிப்பு விழா கல்வியை ஊக்குவிக்கும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். இதில் கலந்து கொள்ள வரும் பெற்ருர் தம் பிள்ளைகளின் குறைபாடுகளையும் திறமைகளையும் அறிந்து கொள்ளவும் நிவர்த்திக்கான முயற்சிகளை மேற் கொள்ளவும் ஏதுவாக இவ் விழாக்கள் அமைகின்றன. மேலும் இவ்வாருன வைபவங்களின் போது வருகை தரும் பழைய மாணவர், பாடசாலை நலன் விரும்பிகள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மாணவர்களது கல்வி தேர்ச்சிகளையும் பாடசாலைத் தேவைகளையும் அதிபரின் அறிக்கை மூலம் அறியும் வாய்ப்புக் கிட்டுகிறது ''

இவ்வாறு வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப சண்முகராசா சில்லாலை ரூேமன் கத்தோலிக்கப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமது உரையில் ''பரிசில்கள் வழங்கப்படும் பொழுது மற்ற மாணவன் தானும் பரிசு வாங்க வேண்டும் என்றும் பெற்ருேர் தம் பிள்ளையும் மேடையேறி பரிசுப்பொருளை பலர் முன்னிலையில் வாங்குவது பெருமை என்றும் நினைப்பர். அடுத்த முறை பரிசு பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் மாணவன் ஊக்கமாக படிக்க பெற்ருர் மாணவனின் கல்விக்கான தேவைகளை தயக்கமின்றிச் செய்யவும் இந் நிலை உதவும்'' என்ருர்.

கல்லூரி அதிபர் திரு. ஏ.எஸ் லோறன்ஸ் தமது அறிக்கையில், இப்பாடசாலையில் தமது கிராம மாணவர் தொடர்ந்து படிக்காது பிறபாடசாலைகள் செல்வதைத் தடுத்து நிறுத்த இங்கு விஞ்ஞானம்;வர்த்தகம், சமூகக்கல்வி கற்பிக்க விசேட பயிற்சி அல்லது பல்கலைக்கழக பட்டம் பெற்ற ஆசிரியர் தேவை. விளையாட்டு மைதானம், ஆசிரியர் பற்ருக்குறை, தளபாடத்தட்டுப்பாடு, இட நெருக்கடி என்பனவும் தீர்க்கப் படவேண்டும் என்று வற்புறுத்தினுர்.

## முள்ளியவளையின் மின்சார விநியோகம் சீர்கேடு

(முல்லைத்தீவு)

கடந்த சில மாத காலமாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளை எனும் கிராம மின் விநியோகப் பகுதியினர் இப்பகுதிக்கு மின்சார விநியோகத்தை சீராக அளிக்க முடியாதிருப்பதாக அறிவிக்கின்றனர்.

சட்டவிரோத மின் பாவனையாளர்கள் முள்ளியவளை பகுதியில் மிகவும் அதிகரித்துள்ளது இதற்கான முக்கிய காரணமாகும். இதனுல் சட்டப்படி மின்சாரம் பெறுபவர்கள்மட்டுமல்ல, பொதுமக்களும் மிகவும் அசௌகரியத்துக்குள்ளாகின்றனர். இப்பகுதியில் உள்ள மின்சார வயர் தாங்கும் தூண்கள் ஒவ்வொன்றிலும் இருந்து பல சட்ட விரோத மின் இணைப்புகளை காணக்கூடியதாக உள்ளது. தொலைபேசிக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ள இம் மின்சார இணைப்புகளில் இருந்து மின்ஒழுக்கு ஏற்படுவதால் இப்பகுதி அடிக்கடி இருளில் மூழ்கி விடுவதுண்டு.

அரச நிர்வாகம் தனது நேரடிக் கண்காணிப்பை நிறுத்தி உள்ள இப்பகுதியில் பல அமைப்புகளிடம் முறையிட்டும். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், இந்நிலை தொடருமானுல் மின்சார நிலையம் மூட வேண்டிய அபாயம் உள்ளதாகவும் இங்கு கடமை புரியும் உயர் அதிகாரி ஒருவர் கூறினுர்.

## பழைய பண்பாட்டுடன் நாம் புதுமைகளையும் அறியவேண்டும்

(சாவகச்சேரி)

''பழைய தமிழ்ப் பண்பாட்டில் ஊறித்திளைத்திருந்தாலும் கூட, இன்று வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் புதுமைகளையும் அறியவேண்டும் பழைய பாரம்பரியத்தையும், நவீன விஞ்ஞானக் கண்ணேட்டத்துடன் இணைத்து சோதிடக் கலைக்கும் வேதாகம அனுஷ்டானங்களுக்கு மிடையில் ஒரு புனித பாலமாக திகழும் வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சிதம்பரநாத குருக்களுக்கு ''சிவாசாரிய திலகம்'' என்னும் சிறப்புப் பட்டமளித்து கௌரவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரம்மஸ்ரீ நா சுப்பிரமணிய ஐயர், சரசாலை இலந்தைத்திடல் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய பிரதம சிவாசாரியர், சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்களுக்கு ''சிவாசாரியதிலகம்'' எனும் சிறப்புப்பட்டமளிப்பு விழாவின்போது கூறினுர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. க. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு தா. காசிநாதன், இளைப்பாறிய அதிபர் திரு. வயிரவப்பிள்ளை, பண்டிதர் சிவகுருநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இளைப்பாறிய அதிபர் திரு பொன். கனகசபை பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர், ''சிவாசாரியதிலகம்'' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கி மலர்மாலை அணிவித்தார்.

பண்டிதர் செ. சிவலிங்கத்தின் ஆசி உரையைத் தொடர்ந்து வேதாகம சோதிட பூஷணம், ஆசாரிய திலகம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாத குருக்கள் பதிலுரை வழங்கினுர்.

## பரீட்சையில் சித்திபெற்றனர்

(புங்குடுதீவு)

இவ்வாண்டு நடைபெற்ற ஐந்தாம் வகுப்பு (ஆரும் ஆண்டு) புலமைப் பரிசில் பரீட்சையில் புங்குடுதீவு கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்திலிருந்து இருவரும், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்திலிருந்து இருவரும், புங்குடுதீவு ஸ்ரீசித்திவிநாயகர் மகாவித்தியாலயத்திலிருந்து இருவரும், நயினுதீவு ஸ்ரீநாக பூஷணி வித்தியாலயத்திலிருந்து இருவரும் இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் க. அகிலன் என்பவர் இப்பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முப்பத்தொன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்ட முடிவுகள்

(நல்லூர்)

இளவாலை சென்ற். ஹென்றிக் கல்லூரிக்கும் பரி. யோவான் கல்லூரிக்கும் இடையே பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வருடாந்த உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவுக்கான போட்டியில் 1:0 கோலாலும், இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் 2:1 கோல்களாலும் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டிகள் வெற்றி பெற்றன. மூன்ருவது பிரிவுக்கான போட்டியில் 2:1 கோல்களால் சென்ற் ஹென்றிக் கல்லூரிக் கோஷ்டி வெற்றி பெற்றது.

உதய சிந்தனை

சூதாடுதலும் குதர்க்கம் பேசுதலும் எந்நாளும் துன்பத்தையே கொடுக்கும்.
- ஔவையார்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

16-11-85 சனிக்கிழமை (குரோதன - கார்த்திகை 1)

# தமிழக மக்களுக்கும் இப்படி ஒரு சோதனையா?

இயற்கையின் சீற்றத்தால் தமிழ்நாடு எதிர்கொண்டுள்ள பாதிப்புகளை அறிந்து ஈழத் தமிழர்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர்.

தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையினாலும், பலத்த காற்றினாலும் சென்னை, புதுச்சேரிப் பகுதிகளே மோசமாகப் பாதிப்படைந்துள்ளன.

உழவுத் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்ட லட்சோப லட்சம் தமிழ்ச் சகோதரர்கள், எமது இரத்தத்தின் இரத்தங்கள் தமிழகத்தில் இன்று வெள்ளத்தால் பாதிப்புற்று அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

ஈழத்தமிழர் அகதிகளாக்கப்படும் போதெல்லாம் அபயக் கரம் கொடுத்து, ஆறுதல் கூறி, அணைத்து, ஆதரவளித்து வரும் தமிழக உடன் பிறப்புக்கள் இன்று வெள்ளத்தால் அகதிகளாக்கப்பட்டுள்ளதை நினைக்கும்போது அவர்களுக்கும் இப்படி ஒரு சோதனையா? என்று, கேட்கத் தோன்றுகின்றது,

இரண்டரை லட்சம் தமிழர்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மாநில அரசும், மத்திய அரசும் ஒன்றுடன் ஒன்று கரம் கோர்த்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

"பாதிக்கப்பட்ட மக்கள் வேதனைப் படுவதற்கு ஒன்றுமில்லை. துரித நிவாரண வேலைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்" என்று நொந்து போன நெஞ்சங்களுக்கு முதல்வர் எம். ஜி. ஆர். தேறுதல் கூறியுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை முதல்வர், சக அமைச்சர்கள் அரச அதிகாரிகள் சகிதம் ஹெலிகப்டரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் சிலர் தமிழகத்துக்கு விரைந்து வந்துள்ளனர்.

தமிழக ஆளுனர் எஸ். எல். குரானா அகதி முகாம்களைச் சென்று பார்வையிட்டு வேண்டிய ஒழுங்குகளுக்கு உடனடி உத்தரவிட்டுள்ளார்.

பாரதத்தின் துணைஜனாதிபதி. திரு. வெங்கட்ராமன் தனது அனுதாபங்களைத் தெரிவித்ததுடன் மட்டும் நிற்காது, விரைவான நிவாரணப் பணிகளுக்கும் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

நாட்டுப்பற்று மிக்க ராணுவ, கடற்படை வீரர்கள் தமிழக மக்களுக்கு உதவுவதையே தமது முதல் கடமையாகச் சிரம்மேல் கொண்டு உதவி புரிந்து வருகின்றனர்.

வெள்ளத்தினால் அழிவுற்ற சுமார் மூன்று லட்சம் ஏக்கர் நெல்வயல்களையும் பார்வையிட்டு, பயிர்களைப் பாதுகாக்க வேண்டிய ஒழுங்குகளை அரச அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி விசேஷ விமானமொன்றில் தமிழகம் பறந்து வந்து, பாதிக்கப்பட்ட இடங்களை ஹெலிகப்டரில் சென்று பார்வையிட்டு வேண்டிய துரித நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழக முதல்வருடன் இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நீதி வழுவா பாரத ஆட்சியின் தலைவர் வேண்டிய நிதியை நிவாரணப் பணிக்கு வழங்கியுள்ளார்.

பணம் கொடுத்தால் மட்டும் போதாது! மனமும் இருக்க வேண்டுமே. இதனையே செயலில் காட்டியுள்ளது பாரத அரசு.

மொத்தத்தில் பார்க்கும் போது முழு இந்தியாவுமே தனது கவனத்தை தமிழகத்தின் பக்கம் திருப்பியுள்ளது எனலாம்.

மக்கள் இன்னல் படும் போது அதனைத் தீர்த்து வைத்து, தன் மக்களை மகிழ்வுடன் வாழவைப்பவனே நல்நாட்டின் தலைவனுக்குரிய சிறப்பு.

தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளமும், பாரத அரசு முழுமூச்சுடன் எடுத்துக்கொண்ட நிவாரணப் பணிகளும் அந்தத் தலைவனுக்குரிய சிறப்பையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

எங்கள் நாட்டில் அகதிகள் தொகைதான் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றதே தவிர அதனைத் தடுப்பதற்குரிய, நிவாரணம் வழங்குவதற்குரிய நற்சிறப்பு வாய்ந்த தலைவர்களைக் காணவில்லையே!

---

★ 'புரன்ட்லைன்' கட்டுரையின் தமிழாக்கம்

# தமிழ் மக்களின் தாயகத்தை பாதுகாப்பது அவசியம்

கவடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கும் ஆட்சி அதிகாரத்தை உரித்தாக்க முதன் முதலில் முன்வந்தது பின்னிணைப்பு- சி. பின்னிணைப்பின்கண் இடம்பெறும் அதிகாரப் பரவலாக்கலைப் பரிபாலிக்கும் தத்துவங்கள் ஜனாதிபதிக்கு உரித்தானவை. தற்காலிக ஆவணமும் (வேர்க்கிங் பேப்பர்) தமிழர்க்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்க முன்வருகிறது. ஆனால் இதனிடத்துள்ள ஜனாதிபதியின் பரிபாலன தத்துவங்கள் பின்னிணைப்பு- சி-யில் உள்ளவற்றை விட வெகுவானவை, வலுமிக்கவை.

1983 ஆண்டுப் பிரேரணைகளானவை பிராந்தியச் சபைகளின் அமைப்புப்பற்றி விதந்துரைப்பன. மக்களின் அபிமான வாக்களிப்பிற்கு இயைய இச் சபையின் உறுப்பினர் தெரிவாவர் இத்தேர்தல்களில் பெரும்பான்மை வாக்குகளை ஈட்டும் கட்சியின் தலைவரே, சம்பிரதாயப்படி முதலமைச்சர் எனப் பிரகடனப் படுத்தப்படுவார். பிரகடனத்தின் முன்னர், அந்நியமனத்திற்கு ஜனாதிபதியின் ஒப்பாசாரமான, அதாவது பெயரளவில் மாத்திரமான, அங்கீகாரம் தேவை.

தற்போதைய நகல் பிரேரணைகளானவை 'வேர்க்கிங் பேப்பர்' எனவும், இக்கட்டுரையினிடத்தே தற்காலிக ஆவணம் எனவும் பெயர் பெறும். மேலும், மாகாண சபையின் பிரதான நிறைவேற்றுனரானவர் இலங்கையின் ஜனாதிபதியினாலேயே நியமிக்கப்படுவார். ஜனாதிபதியின் தத்துவங்கள் ஆழமாகவும் விசாலமாகவும் எங்ஙனம் வடக்கு, கிழக்கில் தொழிற்பட உத்தேசிக்கப்படுகின்றன என்பதை நன்கு உற்று நோக்குவோம். அல்லாமலும், ஜனாதிபதியின் அபிப்பிராயப்படிக்கு, மாகாண சபையின் நம்பிக்கையை ஏவல் கொள்ள வல்லவர் என்பதற்கு மிக அதிக சாத்தியக் கூறுகளை உடைய ஆள் ஒருவரை ஜனாதிபதியானவர் சபையின் பிரதான நிறைவேற்றுனராக நியமிப்பார். அதுமட்டுமல்லாமல், நிறைவேற்று அதிகாரம் அல்லது தத்துவமானது, ஜனாதிபதியின் சார்பில் இப்பிரதான நிறைவேற்றுனரிடமும் அவரது கமிட்டியிடமும் கையளிக்கப்பெறவுள்ளது.

நகல் பிரேரணைகளிற் காணப்பெறும் நிலைமையை இன்னமும் பார்ப்போம். மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடமே உள்ளது. இலங்கைத் தீவின் அரசியல் அமைப்பிற்கு அல்லது பிற சட்டம் எதற்கேனும் இச் சபை இணங்கியொழுகுவதையிட்டு ஜனாதிபதி திருப்தியுறாது இருக்கும் பட்சத்தில், அவர் இவ்வாறு மாகாணசபையைக் கலைப்பார்.

இவற்றுடன் ஒப்பீடாக, பின்னிணைப்பு - சி. தெட்டத் தெளிவாகக் கூறுவது என்ன? பிராந்தியச் சபையின் ஒழுங்கமைப்பிலேயே, அப்பிராந்தியத்திற்குரிய சட்டம் ஆக்குதல், தத்துவங்களை நிறைவேற்றுதல், ஆகிய அதிகாரங்கள் அச்சபைக்கு உரித்தாக்கப் பெறும்.

இரண்டு வருடங்களுக்கு முன் தற்போதுள்ளதிலும் பார்க்க உருப்படியான அதிகாரப் பரவலாக்கல் சட்டக் கோப்பு ஒன்று தமிழருக்கு வழங்க முன்வருவதாக இலங்கை அரசு வாக்குறுதி அளித்திருந்தது. எனவே அதனிலும் பார்க்கக் குறைவான அதிகாரங்களை அரசு இப்பொழுது வழங்க முன்வரும் போது, அதனைத் தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்கள் ஏற்றுக்கொள்ள இணங்க முடியாதென்பது வெட்ட வெளிச்சமாக எவருக்கும் புரியும். குறிப்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணி இடையறாத கரிசனையுடன் இந்த அதிகாரப் பரவலாக்கல் விடயத்தைக் கருத்தூன்றி ஆராய்ந்துவந்துள்ளது. அவ்வாறு தன்னை இப்பணியில் கூட்டணி ஈடுபடுத்தியது, நகல் பிரேரணைகளுள் ஒரு பயன்தரும் தொகுப்பாக, தமிழ் மக்களின் வேணவாக்

**பகுதி இரண்டு**

(நேற்றைய தொடர்ச்சி)

கள் நிறைவேறுதற்கு ஏற்ற வகையில் அவர்களுடைய உரிமைக் கோரிக்கைப் பிரச்சினைத் தீர்வுக்கு அத்தியாவசியமானவை இருக்கும் என்ற அதனுடைய நம்பிக்கையினாலேயே ஆகும். கூட்டணிக்கு, சிறப்பாக போராளி இயக்கங்களோடு சேர்ந்திருக்கையில், தற்போது இலங்கை அரசு வழங்க முன்வந்துள்ளவை சிறிதும் அர்த்த புஷ்டியானவையே அல்ல.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழம் தேசிய விடுதலை முன்னணி, 'புளொட்' ஆகிய தமிழர் விடுதலைக் கட்சிகள் யாவும் அரசியற் பற்றுக்கோடாகக் கொண்டுள்ள ஒரு கருத்தேற்பு யாதெனில் இலங்கைத் தேசத்தின் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் 'தமிழர் தாயகங்களின் ஒருமைப்பாடு' என்பதாகும். ஒருங்கிணைக்கப் பெற்ற வடக்கும் கிழக்கும் கட்டாயமாகும், இன்றியமையாதது என, முன்னணியின் கட்சிகள் நான்கு, மற்றைய இரண்டு ஆகிய ஆறும் வலியுறுத்தி நிற்கின்றன. 'வேர்க்கிங் பேப்பர்' எனும் தற்காலிக ஆவணம் இது பற்றிய நாளைய வாய்ப்பினை அறவே இல்லாமற் செய்துள்ளமை கூறாமலே விளங்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியானது இலங்கைப் பிரதமருக்கு இத்தற்காலிக ஆவணத்தைக் கண்டித்து விமர்சனக் குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளது இக்குறிப்பின் ஆரம்பத்திலேயே தமிழர் தாயகங்களின் ஒருமைப்பாடு மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளதோடு. அதற்குச் சரித்திரபூர்வமான காரணங்களும் முன்வைக்கப் பெற்றுள்ளன. தமிழ் மக்களின் தாயகமாக விளங்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அந்நிலையில் பேணிப் பாதுகாக்கப் பெற்றிருப்பது அத்தியாவசியமானதாகும். தமிழ் மக்களுடைய உயிர், உடைமை என்பவற்றின் பாதுகாப்புடன் இந்நிலை நெருங்கிய தொடர்பு உடையது என ஆதாரங்காட்டி அங்கு வாதம் எழுப்பப்பட்டுள்ளது. வரண்ட வலயத்தினுள் அடங்கும் இந்த நிலங்கள் பெரும்பாலும் அபிவிருத்தி செய்யப்படாது உள்ளன. நீர்ப்பாசனம் உள்ள அற்ப சொற்ப பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு இருக்கும் அதே வேளை, வடக்கு, கிழக்கிற்கு வெளியேயுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் எவற்றிலாவது தமிழர்கள் எவரேனும் குடியமர்த்தப்படவில்லை 'வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியன பொருளாதாரவாரியாகப் பின்னடைந்தவை. இலங்கையின் எஞ்சிய பிரதேசங்களுக்கு வாய்த்துள்ள பயனுள்ள அடித்தள அமைப்புகள், வளங்கள் என்பன இந்த இரு மாகாணங்களுக்கும் கிடையா. ஆதலால் இவை இரண்டும் இணைவதால் 'சிங்கள மக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்பட இடமில்லை' எனத் தீர்க்கமாக இவ்விமர்சனக் குறிப்பில் தர்க்கிக்கப்பட்டுள்ளது

தற்காலிக ஆவணத்தில் அதிகாரப் பரவலாக்கலுக்குப் பாத்திரமாகும் சபைகள், உரித்தாக்கப்படும் அதிகாரங்கள் ஆகியன கையாளப்பட்டுள்ள விதமும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிருப்திக்கு ஏதுவாகியுள்ளன.

அதிகாரப்பரவலாக்கல் என்பதற்கு வரைவிலக்கணம் கூற முற்படும் இக்கண்டன விமர்சனமானது செல்லும் வகை வருமாறு: குறித்து உரைக்கப்பட்டவிடயங்கள்தொடர்பான அதிகாரங்களானவை, இப்பரவலாக்கலுக்குப் பாத்திரமான சபைகளுக்கு உரித்தாக்கப் பெறுதலே, அதிகாரப் பரவலாக்கல் மூலம் ஆட்சித் தத்துவங்கள் பகிர்ந்து கொள்ளப் படுதல் என்பதன் அர்த்தமாகும். இதன் விளைவு யாது? 'இப்பரவலாக்குதலை ஏற்றுக் கொள்ளும் சபையின் அதிகாரத்தின் கீழ் குறித்த சில விடயங்கள் அமையும்,' என்பதாகும்.

குறித்துரைக்கப் பெற்ற விடயத்தின் செயற்பாட்டு எல்லையினுள் வரும் ஏதொரு கருமமும் மத்திய அரசின்கைகளில் தொடர்ந்தும் இருந்து வர வலுவுள்ள காரணங்கள் இருத்தல் வேண்டும். காரணங்கள் அப்படி இல்லாவிடத்து. மத்திய அரசு அதிகாரத்தைத் தொடர்ந்தும் தன்னிடமே வைத்திருத்தலாகாது. 'பரவலாக்கப்பட்ட ஒரு விடயம் தொடர்பான தொழிற்பாடுகளானவை, பரவலாக்கத்தை ஏற்றுக்கொள்ளும் சபையிடமிருந்து அந்நியப்படுத்தப் படுதலாகா. அவ்விடய அதிகாரமானது அந்தப்படியே பரவலாக்கம் ஏற்கும் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.' இவ்வாறு இலங்கைப் பிரதமரை விளித்து அனுப்பப்பட்ட விமர்சனக் குறிப்பு சுட்டிக்காட்டுகிறது.

தற்காலிக ஆவணத்தில் இடம் பெறும் ஆட்சி அதிகா

...5ம் பக்கம் பார்க்க

★ மத்திய கொலம்பிய எரிமலைவெடிப்பில் 20 ஆயிரம் பேர்பலி; உறைபனி ஆறாக ஓடியது

# கூரையில் 100 பேர் தொங்கி ஜீவமரணப்போர்

# பல நகரங்கள் நிர்மூலம்!

(போபட்டா)

மத்திய கொலம்பியாவில் நிகழ்ந்த எரிமலை வெடிப்புச் சம்பவம் தொடர்பான திடு கிடும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மத்திய கொலம்பியத் தலைநகரான போபட்டாவுக்கு நூற்றறுபது கிலோ மீட்டர் வடமேற்கே உள்ள அம்மிலோ நகரமே இதனால் பெரும்நாசத்தையடைந்துள்ளது. மேலும் பலநகரங்களும் நிர்மூலமாகியுள்ளன என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இங்கு ஹெலிகொப்டரில் நிலைமையைப் பார்வையிட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர், இங்கு சுமார் நூறு பேரே எஞ்சியுள்ளனர் என்றும் அவர்கள் வீட்டுக் கூரைகளின் மீது பரிதாபத்துடனும் பீதியுடனும் தொங்கிக்கொண்டிருப்பதாகவும் தகவல் வெளியிட்டுள்ளார்.

இங்கு தொண்ணூறு வீதமான வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

ஐயாயிரம் மீற்றர் உயரமான இந்த எரிமலை வெடித்துச் சிதறியபோது மண், சாம்பர், சேறு என்பன விண்ணளவில் வாரியிறைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உறைபனி ஆறாகப் பெருக்கெடுத்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உதவிப்பணிகளும், மீட்புப் பணிகளும் முழு வீச்சில் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கொடூர எரிமலை வெடிப்பதால் இருபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் மடிந்ததாக அதிகாரிகளின் முதல்மதிப்பீடு தெரிவித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது

### பிந்தியசெய்தி

(போபட்டா)

மத்திய கொலம்பிய எரிமலை வெடிக்கப்பால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து சர்வதேச உதவிகளை மத்திய கொலம்பியா கோரியுள்ளது

## எண்ணெய் நிலவாயு கண்டுபிடிப்பு

(பம்பாய்)

பம்பாய்ப் பகுதி கிணறு ஒன்றிலிருந்து எண்ணெயும் நிலவாயுவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

திரிபுராவிலும் நிலவாயு சண்டறியப்பட்டுள்ளதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது,

## அர்ஜுன்சிங் மத்திய மந்திரியானார்

## பஞ்சாப் பிரச்சினை சுமுகநிலை காண பெரிதும் உதவியவர்

(புதுடில்லி)

பஞ்சாப் கவர்னராகக் கடமையாற்றிய திரு. அர்ஜுன்சிங் புதிய மத்திய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி திரு. கியானி ஜெயில்சிங் எளிய நிகழ்ச்சியொன்றில் அவருக்கு பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். அப்போது பிரதமரும் தன் சக அமைச்சர்களுடன் சமுகமளித்திருந்தார்.

வர்த்தகத்துறைக்குப் பொறுப்பான அமைச்சராக திரு. அர்ஜுன்சிங் இருப்பார்.

பஞ்சாப் பிரச்சினையைப் பிரதமர் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்குச் சூத்திரதாரிகளாக இருந்த சீக்கியர்களில் இவர் மிக முக்கியமானவராவார்.

இவர் பதவியேற்றக்கொண்டபின் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் திரு. அர்ஜுன்சிங் பஞ்சாப்பில் சிறப்பாகப் பணியாற்றியதற்கான பரிசாக இம்மந்திரிப் பதவி வழங்கப்பட்டதா? என நிருபர்கள் கேட்டார்கள்.

''அரிசியலில் பரிசு என்ற பேச்சுக்கே இடமில்லை. பணிகளைத் தொடர வேண்டும் என்றே இந்நிலையைக் கொள்ளவேண்டும்'' என்று பிரதமர் பதிலளித்தார்.

## லைபீரிய புரட்சி சதி முயற்சி எதிரணி தலைவர்கள் கைது

(லண்டன்)

லைபிரியாவில் கடந்த தினங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட புரட்சிச்சதி பற்றிய மேலும் தகவல்கள் நேற்று வெளியிடப்பட்டன.

முறியடிக்கப்பட்ட இச் சதி முயற்சியின் எதிரொலியாக எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டுள்ளதாக இத் தகவல்கள் கூறின.

## ஐ. நா. சபையில் வற்புறுத்து

## ஜெனீவா மா நாடு: ஒப்பந்தம் உருவாக வேண்டும்

(நியூயோர்க்)

அணுவாயுதப் போட்டோ போட்டிக்குத் தீர்வுகாணும் வகையில் இரு மா வல்லரசுகளுக்கும் இடையே இம் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள உச்சிமா நாட்டில் உடன்பாடு ஒன்று எட்டப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பெரும்பாலான அங்கத்துவ நாடுகள் கோரியுள்ளன.

அரசியல் பந்தோபஸ்து சபையில் பாரதம் யூகோஸ்லேவியா உட்படபத் தொன்பது நாடுகள் கொண்டு வந்த இத் தீர்மானத்தை நூற்றுப் பதினேழு உறுப்புநாடுகள் ஆதரித்தன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட பதிநான்கு நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

சோவியத் யூனியன் இத்தீர்மானத்தை ஆதரித்தது.

அமெரிக்காதனதுநிலைப்பாடு குறித்து விளக்குகையில் இது பற்றிப் பொதுக் கருத்து ஒன்றினை எட்டத் தமக்கு அவகாசம் தேவை என்று தெரிவித்தது.

இது இவ்வாறிருக்க, அமைதிப்பணிக்கான தனது முயற்சிகள் தொடரும் என்று அமெரிக்க ஜனாதிபதி றீகன் நேற்றுக் கூறினார்.

## அஸாம் தேர்தல் டிச 16ல்; வேட்புமனு தாக்கல் 22வரை

(புதுடில்லி)

அஸாம் தேர்தல்கள் அடுத்த மாதம் பதினாறும் திகதி நடைபெறவுள்ளது.

இங்கு நூற்றிருபத்தாறு சட்ட சபைத் தொகுதிகளும், பதினான்கு லோகசபைத் தொகுதிகளும் உள்ளன.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் கடைசித்தினம் இருபத்திரண்டாம் திகதி ஆகும்.

இவை இருபத்திமூன்றும் திகதி பரிசீலனைசெய்யப்படும். இருபத்தைந்தாம் திகதிவரை வேட்புமனுக்களை வாபஸ்பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இங்கு நிலவிய சீரற்றநிலையால் பலகாலம் தேர்தல்கள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சேலத்தில் விமான நிலையம்

(சேலம்)

சேலத்தில் விமான நிலையம் ஒன்று அமைக்க மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது என்று சேலத்துக்கு விஜயம்செய்த மத்திய விமானத்துறை அமைச்சர் திரு. டைகிலர் கூறியுள்ளார்.

## தமிழ் மக்களின்

— 4ஆம் பக்கத் தொடர்

ரப்பரவலாகக் கருத்தேற்பில் உள்ள பிரச்சினை என்னவெனில், பரவலாக்கப்பெறும் அதிகாரங்கள் எவையேனும் அங்கு இல்லாமை ஆகும். என்கிறது தமிழர் விடுதலைக் கூட்டணி. தொடர்ந்தும் கூட்டணி எடுத்துரைப்பன வருமாறு: மாற்றீடு செய்யப்பட்ட அதிகாரமானது பரவலாக்கத்தினை ஏற்கும் சபையினுற் சுதந்திரமாகப் பாலிக்கப்படுதல் வேண்டும். மத்திய அரசிற்கு அவ்விடயம் சம்பந்தமான உரிமை ஏதாவது இருத்தல் ஆகாது. 'அவ்வதிகாரம் பாலிக்கும் உரிமை அல்லது பரவலாக்கலை ஏற்கும் சபையினுல் அவ்வதிகாரம் பிரயோகிக்கப்படுதலைக் கண்காணிக்கும் அல்லது மீளாய்வு செய்யும் அல்லது மீள்நோக்கும் உரிமை எதுவும் மத்திய அரசினிடம் இருத்தலாகாது' இது தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு.

(தொடரும்)

## பாக். தலைமைப் பீடம் பாரத பிரதமருக்கு விசேட செய்தி!

(புதுடில்லி)

பாகிஸ்தான் நிதியமைச்சர் மாஹூபல் ஹக் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக்கினதும், பிரதம மந்திரி திரு. ஜுனெஜோவினதும் விசேட செய்திகளை பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்திக்குக் கொண்டுவந்துள்ளார் என நேற்றுப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது பாரத விஜயம் மேற்கொண்டுள்ள அவர் பாரத நிதியமைச்சருடன் இருதரப்பு உறவுகள் உட்பட பல் வேறு விடயங்கள் குறித்தும் குறிப்பாகப் பொருளாதார ஒத்துழைப்புப் பற்றிப் பேசுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாரதத்திற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நட்புறவு நிலை சமீப காலமாகப் பெரிதும் சீர்கெட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இரு நாட்டுத் தலைவர்களும வெளிநாட்டு மாநாடுகளில் சம்பிரதாய பூர்வமாக சந்தித்துச் சம்பாஷித்தே வருகின்றனர்,

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித்து வருகின்றது என்று பாரதம் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றது.

## 'தகழி'க்கு ஞானபீட விருது: டில்லிவிழாவில் பெற்றார்

(புதுடில்லி)

புதுடில்லியில் நடைபெற்ற விழா ஒன்றில்வைத்து ஞானபீட சிறப்பு விருதை பிரபல எழுத்தாளர் தகழி சிவசங்கரன்பிள்ளை பெற்றுக்கொண்டார். மெக்ஸிக்கோ கவிஞர் திரு. பேக் இதனை அவருக்கு வழங்கினார்.

ஒன்றரை இலட்சம் ரூபா ரொக்கம் கொண்ட காசோலையுடன் கலைமகளின் விக்கிரகமும் சான்றிதழும் இதில் அடங்குகின்றன.

தன்னை ஒருவிவசாயி என்றும் கதை சொல்பவன் என்றும் கூறிக்கொள்ளும் தகழி சிவசங்கரன்பிள்ளைக்கு இப்போது எழுபத்துமூன்று வயதாகிறது.

இவர் முப்பத்து மூன்று நாவல்களும், ஐநூறு சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

## நிருபர்கள் தேவை

காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை. தெல்லிப்பளை, சுன்னுகம், அளவெட்டி, உரும்பராய், கோண்டாவில், அராலி, வசாவிளான், புத்தூர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, மண்டைதீவு, நெல்லியடி, வவுனியா, மன்னர் ஆகிய இடங்களில் ஈழமுரசு நிருபர்களாக கடமையாற்ற அந்தந்தப் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். 30-11-85வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

ஆசிரியர்
ஈழமுரசு
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்,

16 11 1985 சனிக்கிழமை

ஈழமுரசு

## லைபீரிய சதியின் சூத்திரதாரி கியூம்பா சுட்டுக் கொலை!

(மொன்ரோவியா)

மேற்காபிரிக்க நாடான லைபீரியாவில் சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற சதிப் புரட்சியை நடத்தியதாகத் தெரிவிக்கப்படும் லைபீரியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் கியூம்பா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிககப்பட்டுள்ளது. இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்ற செய்தியை மட்டுமே அறிவித்த லைபீரிய அரசாங்கம் எப்பொழுது, எவ்வாறான சந்தர்பத்தில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதையோ எங்கே வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றோ அறிவிக்கவில்லை.

### அரிசி, மா, சீனி விலை இப்போது மாற்றமில்லை

# குளிர்பானங்கள், டின்மீன், தேயிலை ஆகியவற்றின் விற்பனை வரிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

குளிர்பானங்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், உடன் தேயிலை ஆகியவற்றின் மீதான விற்பனை வரி ஆறு வீதத்திலிருந்து பத்து வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதி சக்தி வாய்ந்த பற்றரிகளின் மீதான வரியும் நான்கு சதவீதத்திலிருந்து ஐந்து வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் உணவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் அரிசி, மா, சீனி போன்ற பொருட்களின் விலைகள் உடனடியாக மாற்றப்படமாட்டாது என உணவு கூட்டுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இவை கடந்தமாதத்தில் விற்கப்பட்ட விலையிலேயே விற்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாத முற்பகுதியில் அரிசி, மா, சீனி, பாண் ஆகியவைகளின் விலை அதிகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### வடகிழக்கு ...

ஓமனில் தேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இது பற்றிப் பேசக்கூடுமெனவும் தெரியவந்துள்ளது.

இலங்கை அரசு இணக்கத்தீர்வொன்று காண்பதற்கு தனது போக்கினை மாற்றுவிடின், இந்திய அரசின் நிலைப்பாட்டில் சில மாற்றங்கள் ஏற்படலாமென்றும் மிக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடுத்த மாதம் 4-ம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தன டாக்கா செல்லும் வழியில் புதுடில்லியில் தங்கி பாரதப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர், இலங்கை தனது முடிவை அறிவிக் வேண்டுமென இந்திய அதிகாரிகள் இப்போது எதிர்பார்க்கின்றனர்.

## பகவான் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அறுபதாவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். மத்திய பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தியினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி அநாதை பாடசாலையில் உள்ள பிள்ளைகளுக்கு பஜனையும் மதிய போசனமும் நடைபெறும்.

23-ம் திகதி சனிக்கிழமை பகவான் பாபாவின் பிறந்த தின விழா யாழ்ப்பாணம் ரவிகரஞ்சன சபா மண்டபத்தில் பிற்பகல் நடைபெறும், மேற்படி சமித்தி பாலவிகாஸ் மாணவ, மாணவிகளினால் பஜனையும் நடன நாடகமும் நடத்தப்படும்.

## இன்று 'நீதி' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை நான்கு மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் ''நீதி'' எனும் பத்திரிகை அங்குரார்ப்பண வைபவம் தொழிலதிபர் திரு க, கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

## மற்றுமொரு தாக்குதல்?

(சென்னை)

வங்கக் கடலில் உருவாகியிருக்கும் மற்றுமொரு குறைந்த காற்றமுக்கமண்டலத்தால் தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய பகுதிகளில் இன்று சிறு பாதிப்பு ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது. அறுபது மைல் வேகத்தில் காற்று வீசுமெனவும், அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு மழை பெய்யலாமெனவும் வானிலை நிலையம் அறிவித்துள்ளது.

### தமிழகத்துக்கு ...

நிதியிலிருந்து'' புதுச்சேரிக்கு ஐந்து இலட்சம் ரூபாவையும், தமிழகத்திற்கு பதினைந்து இலட்சம் ரூபாவையும் உடனடித் தேவைக்காக ஒதுக்கிக்கொடுத்தார். புதுச்சேரியில் சுமார் நாற்பதாயிரம் பேர் இவ்வெள்ளப் பெருக்கால் வீடிழந்துள்ளார்கள். தஞ்சாவூரில் பத்து கிராமங்களைச் சேர்ந்த சுமார் அறுபதாயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளார்கள். இங்கு சுமார் இருபத்தைந்து கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பூஸா இளைஞர் ...

இவ்வாறு விடுதலை செய்யப் படவிருப்பவர்களின் பெயர் விபரங்கள் முற்கூட்டியே அந்தந்தப் பகுதி அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்படும்.

அரசாங்க அதிபரினால் வழங்கப்படும் அத்தாட்சிக் கடிதத்துடன் இளைஞர்களின் பெற்றார், அல்லது நெருங்கிய உறவினர் பூஸாவுககுச் சென்று இளைஞர்களை நேரடியாகப் பொறுப்பேற்று அழைத்துச் செல்லவேண்டும்.

### ஒட்டுசுட்டான் ...

களாகத் தொடர்ச்சியாகச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்றும், அப் பகுதியால் சென்ற வாகனங்கள் மீது பலதடவை இவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

காயமடைந்த நால்வரும் ஹெலிக்கப்டரில் அனுராதபுரம் ஆஸ்பத்திரி கொண்டு செல்லப்பட்டு பின்னர் கொழும்பு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

## சிங்கள தேர்ச்சி நீக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை

(சுண்டுக்குளி)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் தமிழ் பேசும் விசேட சேவை அலுவலர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி நிபந்தனையை விலக்குமாறு கோரும் மகஜரொன்றைத் தமிழ் பேசும் விசேட சேவை அலுவலர் கழகச் செயலாளர் திரு. வி. ரி. கதிர்காமநாதன் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் தமிழ் பேசும் விசேட சேவை அலுவலர் கழகப் பிரதிநிதிகளைக் கொண்ட தூதுக் குழுவொன்று இவ்விடயமாக பிரதேச அபிவிருத்தி அமைச்சரை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது.

சிங்களத் தேர்ச்சி நிபந்தனை பற்றித் தொடர்ந்தும் அமைச்சர் திரு. செ. இராசதுரையுடன் இக்கழகம் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் அமைச்சரின் அனுமதியைக் கோரியுள்ளது.

## இளவாலை, விளானில் கசிப்பு ஒழிப்பு வேலைகள் தீவிரம்

இளவாலை, விளான் பகுதிகளில் இடம்பெற்றுவரும் கசிப்பு விற்பனையை ஒழிக்க இளைஞர் குழுவினர் கடும் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். அண்மையில் சில வீடுகளில் கசிப்பு மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதுடன் அவையிருந்த கொள் கலன்களும் சேதமாக்கப்பட்டன.

எனினும் சில இடங்களில் மீண்டும் கசிப்பு வியாபாரம் நடப்பதை தொடர்ந்து இரவு நேரம் இப்பகுதிகளுக்கு வரும் வாகனங்களை இளைஞர்கள் சோதனையிட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இவ்வாறு கண்காணிப்பில் ஈடுபட்ட இளைஞர்கள் வீதியில் சென்ற சிறுவனின் பொதியை சோதனையிட்டபோது அவனிடம் கசிப்பு இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது விசாரணையின் பின் அச்சிறுவன் விடுவிக்கப்பட்டான்.

### இளம்பெண் ...

திய வானொலி நேற்றிரவு அறிவித்தது. உயிலங்குளத்தில் ஆறு பேரை படையினர் சுட்டுக் கொன்றதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

### குடாநாட்டில் ஹர்த்—

யாவும் செயலற்றுக்கிடந்தன.

யாழ். வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதியில் மிகக் குறைந்தளவு நோயாளர்களையே காணக்கூடியதாய் இருந்தது.

வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது. சிலர் தமது அத்தியாவசிய தேவையின் பொருட்டு சைக்கிள்களில் சென்றனர், சில வாகனங்கள் வெள்ளைக்கொடிகளைப் பறக்க விட்டுச்சென்றன.

சன சந்தடியுடன் காணப்படும் யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதிகள், மீன்சந்தை, மரக்கறிச்சந்தைகளும், மினித் தியேட்டர்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

தேனீர்க்கடைகள், மருந்துக் கடைகள்கூட பூட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

வடபிரதேச போக்குவரத்துச்சபை பஸ்கள், தனியார் பஸ்கள் எதுவும் சேவையிலீடுபடவில்லை. ரயில் சேவை அரசாங்கத்தினால் ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

### வவுனியா, மன்னார்....

ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளது.

மன்னாரில் அநேகமான கடைகளும் திறக்கப்பட்டிருந்ததாகவும், தனியார் பஸ்கள் உட்பட வாகனப் போக்குவரத்துகள் வழக்கம் போலக் காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## படையினர் மீது குண்டுவீச்சு

மன்னார்-மதவாச்சிப் பாதையில் பாதுகாப்புப் படையினர் மீது தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மாலை குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தியதாகவும் அப்போது நடந்த சமரில் ஆறு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## அம்பாறைத் தாக்குதல்

அம்பாறை மாவட்டத்திலுள்ள மண்டூரில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. பதில் தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டதில் ஒருவர் மரணமானார்.

## திருடன் யார்?

(அரியாலை)

அரியாலை திருமகள் சன சமூக நிலையத்தில் இருந்த பெறுமதியான சுவர்க் கடிகாரம் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

### பஸ்ஸுக்கு குண்டு ...

பெற்றதாகத் தெரியவந்துள்ளது.

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று காலையில் சேவையிலீடுபட்டிருந்த போது குண்டு வீச்சுக்கு இலக்கானதால் சகல பஸ் சேவைகளும் பின்னர் நிறுத்தப்பட்டன.

புகையிரத நிலையத்தில் பிரயாணிகள் இல்லாத போதிலும் புகையிரதம் புறப்பட ஆயத்தமான வேளையில் ரயில் பாதையில் குண்டொன்று வெடித்ததையடுத்து சேவை ரத்துச் செய்யப்பட்டது.

நகரில் பல இடங்களிலும் ஆயுதப் படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடக் காணப்பட்டனர்.


# I. C. M. A

## [MAY '86]

### Commencing on 2nd Dec '85

| | | |
|---|---|---|
| I. C. M. A - Section 'A' | (week-days) | 2-12-85 |
| Section 'B' | (week-ends) | 7-12-85 |
| Pr fessional Part I | (week-ends) | 7-12-85 |
| I. A. B. Foundation / Inter / Final | | 7-12-85 |

விரிவுரையாளர் குழு

V கருணாநிதி, K. P. அரவிந்தன், ஜோய் டேவிட்
S சிவபாலன், S. R. உதயணன், Mrs. S. மூர்த்தி

Cur course fee will be in consistent with hours of lecture

விபரங்களுக்கு

RAPID RESULTS INSTITUTE

212, Kachcheri - Nallur Road, Jaffna

"GOOD WINE NEEDS NO BUSH"


'ஈழ முரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 16-11-1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336